மாகாண பொது நிர்வாக செயலகம், வட மாகாணம்
පළාත් රාජ්‍ය පරිපාලන කාර්යාලය, උතුරු පළාත
**PROVINCIAL PUBLIC ADMINISTRATION SECRETARIAT,**
**NORTHERN PROVINCE**

தொடர் இல:
යොමු අංකය:
Ref No:

எனது இல:
මගේ අංකය
My No: NP/02/18/GN/18

22.12.2009

மாகாணப் பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம்: **NP/02/2009(16)**

அமைச்சின் செயலாளர்கள்
பிரதிப் பிரதம செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
வட மாகாணம்

<u>தாபனவிதிக்கோவை, மாகாண நிதி விதிகள், சுற்றறிக்கைள் மற்றும் ஏனைய கட்டளைகளை நாளதுவரைப்படுத்தல்</u>

மேற்படி விடயம் தொடர்பாக,

அரச திணைக்களங்களினால் மேற்கொள்ளப்படும் அலுவலக செயற்பாடுகள் யாவும், தாபனவிதிக்கோவை, மாகாண நிதி விதிகள், சுற்றறிக்கைகள் கட்டளைகள், விதிகள் ஆகியவற்றின் ஏற்பாடுகளுக்கமையவே மேற்கொள்ளல் வேண்டும்.

எனவே, பின்வரும் விடயங்களில் மேலதிக கவனமெடுத்து, திணைக்கள செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லுமாறு பிரதம செயலாளரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1. அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகள் மூலம் காலத்திற்குக் காலம் வெளியாகும் தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகள், மற்றும் அறிவுறுத்தல்கள் யாவற்றையும் கருத்திலெடுத்து செயற்படல்.
2. மாகாண நிதிப் பிரமாணம் தொடர்பாகவும் அவை தொடர்பாக காலத்திற்குக் காலம் வெளியாகும் மாற்றியமைப்புகள் கட்டளைகள் யாவற்றையும் கருத்திலெடுத்து செயற்படல்.
3. மாகாணப் பொது நிர்வாக செயலகத்தில் பேணப்படும் அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைகளின் வழிகாட்டல்களின் தொகுப்பின் மென்பிரதியை பயன்படுத்தி உரிய பொருத்தமான பகுதிகளை இலகுவில் இனங்கண்டு கடமைகளை செயற்படுத்தல்
4. அனுமதிக்கு ஆவணங்கள் பொருத்தமான நியமன அதிகாரிகளுக்கு முன்னளிக்கும் பொழுது, எந்த அடிப்படையில் எந்த ஏற்பாடுகளுக்கமைய சிபார்சு செய்யப்படுகின்றது என்பதை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதுடன் ஊகத்தின் அடிப்படையில் தீர்மானம் எடுத்தல் பொருத்தமற்றது.
5. மேற்குறிப்பிட்ட சகல ஆவணங்களை தொகுத்து வைத்திருப்பதுடன், இச் செயற்பாட்டை மேற்கொள்ள ஒவ்வொரு திணைக்களத்திலும் ஒரு அலுவலருக்குக் கடமைகளைக் கையளித்தல்.
6. நிர்வாக அலுவலர்கள் சகல விடயங்களுக்கும் சட்ட ரீதியானதாகவுள்ளமையைக் கண்காணித்து மேம்படுத்தல்

இவ்விடயங்களைக் கருத்திலெடுத்து முழுமையான ஒத்துழைப்பை வழங்கி, வட மாகாண நிதி மற்றும் நிர்வாக செயற்பாடுகளை மேலும் சிறந்த முறையில் முன்னெடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

*தி.இராசநாயகம்*
பிரதிப் பிரதம செயலாளர்

பிரதி: பிரதம செயலாளர், பிரதம செயலாளர் செயலகம், வட மாகாணம்
ஆளுநரின் செயலாளர், ஆளுநர் செயலகம், வட மாகாணம்

கன்னியா வீதி, வரோதயநகர், திருக்கோணமலை, இலங்கை.
කන්නියා පාර, වරෝදයනගර්, ත්‍රිකුණාමලය, ශ්‍රී ලංකාව.
Kanniya Road, Varothayanagar, Trincomalee, Sri Lanka.
[illegible]
Email : npminpna@sltnet.lk